பதிவுசெய்யப்பெற்ற பதினப்பத்திரிகையாகப்

# இந்துசாதனம்.

DUPLICATE

# THE HINDU ORGAN.

சோமவாரத்திலும் குருவாரத்திலும் பிரசுரமாகும்.

"எனைத்தானு நல்லவை கேட்க வனைத்தானு, மான்ற பெருமை தரும்."

பத்திரக் கிரயம்.
யாழ்ப்பாணப் பட்டினம்: ஸூ 1-க்கு ரூ. 5-60
வெளியூர், இந்தியா: ,, ரூ. 9-40
தொடுவாய்ப்பகுதி: ,, ரூ. 9-40
தனிப்பிரதி: சதம் 6
முற்பணம் அனுப்புவோருக்கே பத்திரிகை அனுப்பப்படும்.

விளம்பர விகிதம்.
முதன் முறைக்கு:—ஒருகலம் ரூ. 9-40
,, அரைக்கலம் ரூ. 5-00
,, காற்கலம் ரூ. 3-15
,, ஒரு அங்குலம் சதம் 65
அடுத்த முறைகட்கு மேற் விகிதங்களிற் பாதி.
விளம்பரங்கள் முற்பண மனுப்பினலன்றிக் கவனிக்கப்படா.

புத்தகம்—ரு0. } யாழ்ப்பாணம்:—ருதிரோற்காரிஸூ கார்த்திகைமீ உகஉ (1923 டிசெம்பர் 6) வியாழக்கிழமை { இலக்கம்—சரு.

உ
கணபதி துணை.

சீர்பூத்த கருவிநூ லுணர்ச்சி தேங்கச்
சிவம்பூத்த நிகமாக மங்க ளோங்கப்
பார்பூத்த புறச்சமய விருள்க ணீங்கப்
பரம்பூத்த சைவநிலை பாரோர் தாங்கப்
பேர்பூத்த சிவானந்தத் தினிது தூங்கப்
பிறைபூத்த சடைமவுலிப் பிரானர் தந்த
வார்பூத்த வறிவிச்சை தொழிலென் றேது
மதம்பூத்தவிநாயகன்றாள் வணங்கிவாழ்வாம்.

வாழ்க வந்தணர் வானவ ரானினம்
வீழ்க தண்புனல் வேந்தனு மோங்குக
ஆழ்க தீயதெல் லாமர னாமமே
சூழ்க வையக முந்துயர் தீர்கவே.

---

## ஸ்ரான்டேர்ட் கொளுக்கியோடுகள்.

**(Standard Tiles.)**

இவை வேருேக் என்னுமிடத்திலுள்ள ஸ்ரான்டேர்ட் ஓட்டுக் கம்பனியாரால் செய்யப்படுவன.

இவ்வோடுகள் இக்காலத்திலுள்ள மற்றைய ஓடுகளைக்காட்டிலும் திறமானவையும் மலிவானவையும் இலேசானவையும் நீடித்தகாலத்திற்கு நின்று பிடிக்கத்தக்கனவுமாகும். இந்த ஓடுகளே இலங்கையிலும் இந்தியாவிலும் இக்காலத்தில் அதிகமாக உபயோகிக்கப் படுகின்றன. இவைகள் (வேயப்பட்ட வீட்டுள் வசிப்போருக்கு) குளிர்மையையும் தேகாரோக்கியத்தையும் கொடுக்கத்தக்கனவாயும் எவ்வகையிலும், எனைய ஓடுகளிலுஞ் சிறந்தனவாயுமிருக்கின்றன. யாழ்ப்பாணத்துள்ள சிறந்த கல்லூரிகளுக்கு இவ்வோடே உபயோகிக்கப் பட்டுள்ளன. மற்றும் ஓடுகளை வாங்குதற்கு முன் இதனையும் ஒருமுறை பரீட்சித்துப் பாருங்கள். விரும்புவோர் யாழ்ப்பாணத்திலேனும் வல்வெட்டித்துறையிலேனும் பருத்தித்துறையிலேனும் S. வீரகத்திப்பிள்ளையிடம் பெற்றுக்கொள்ளலாம். (H. 18.)

---

அநேக பரிசு நற்சாக்ஷிகளும் பெற்ற மருந்துகள்.

## இழந்துபோன பலத்தை

ஒரு குளிகை சாப்பிட்ட 6 மணி நேரத்தில் கொடுக்கும்!!

**ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.**

**புஷ்டிக்கு கைகண்ட மருந்து.**

இதை இன்றே பரீட்சித்துப்பார்க்கவும்.

ஆச்சரியமான குணம்! மிக இன்பமான சுகம்!!

புஷ்டியை உண்டாக்குவதில் இது எதற்கும் நிகரற்றது! எந்த மருந்தும் இதற்கு இணையல்ல! ஒரே குளிகையில் பரீக்ஷை பார்க்கலாம்! தளர்ந்துபோன நரம்புகளுக்கு முறுக்கேற்றும்! வீரியத்தைக் கெட்டிப்படுத்தும், இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தைத்தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150-மாத்திரை ரூ. 10. 50-மாத்திரை ரூ. 4-0-0
20-மாத்திரை ரூ. 2. வி. பி. சார்ஜ்வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்தி செய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம் உடனே நிற்கும். புட்டி ரூபா 2.

### ரசமணி.

சகல வசியம், தனலாபம், அருள், கீர்த்தி, தொழிலபிவிருத்தி, நினைத்தகாரிய சித்தி மென்மேலும் பெருகும், தொத்து நோய், அவமிருத்து தோஷம், மேகவியாதிகள் அணுகாது. உபயோகிக்கும்முறை மணியுடன் வரும். மணி 1-க்குரூபா 2. 6 மணி ரூபா 10.

பினங்கு, சிங்கப்பூர், கோட்டாஸ், முதலிய தேசவாசிகள் முன் பணம் அனுப்பவேண்டும்.

☞ T. R. கருப்பண பிள்ளை,
வைத்தியசாலை,
(Q. 40) பழனி. S. I.

---

உலகமேங்கும் புகழ்பெற்ற மருந்துகள்.

### மன்மத கோலாகலக் குளிகை.

இது ஒன்றே திவ்விய அவுஷதம்! மகா அருமையானது!! ஆச்சரியமான குணமுள்ளது!!!

இது புஷ்டிக்கு நிகரற்ற மருந்து. இதற்குச் சமமான தொன்றுமில்லை. ஒரே குளிகையில் பரீக்ஷிக்கலாம். ஜீரணம், இரத்த விர்த்தி, இந்திரியக் கட்டு, புஷ்டி உண்டாகும். எவ்வித பலஹீனம், நரம்புத்தளர்ச்சி, சக்திக்குறைவு, இடுப்புவலி நீக்கும். இழந்த பலமும், ஆண்மையும் திரும்ப உண்டாகும். இல்வாழ்வில் இன்பத்தையும் உற்சாகத்தையும் கொடுக்கும். உத்தரவாதமுள்ளது. 120 குளிகை ரூபா 10. 60 குளிகைக்கு ரூபா 5. 30 குளிகை ரூபா 3. மாதிரிக்கு 20 குளிகை ரூபா 2.

### மூலத்திற்கு குருநாகபஸ்பம்

ஆப்ரேஷன் அவசியமில்லை; முளை தானே கரையும்; சீழ்மூலம், இரத்தமூலம், குத்தல், மூலமுளை, மலபந்தம் முதலியமூலம் ஒன்பதும் அதிசீக்கிரம் குணமாகும். உத்தரவாத முள்ள சிறந்த அவுஷதம். புட்டி ஒன்றுக்கு ரூபா 4.

### இருமலுக்கு குருதாளக பஸ்பம்.

காசம், க்ஷயம், ஈளை, இளைப்பு, இருமல், கஷ்டசுவாசம், கோழை, கபக்கட்டு இவைகள் எவ்வளவு நாட்பட்டதாயிருந்தாலும் சீக்கிரம் தீரும்; எட்டுவித காசமும் தீரும். புட்டி ரூபா 4.

### பிரமேக நிவாரணி

வெள்ளை, வெட்டை, தந்திமேகம், நீர்க்கடுப்பு, குத்து உடனே நிற்கும்; மூன்றுவேளையில் குணமாகும்; தவறாது. மிக்க அநுபவமானது. புட்டி ரூபா 2.

### மாந்திரீக சத்து.

இதை அணிந்துகொண்டால் சகல வசியம், தன லாபம், நினைத்தகாரியசித்தி, தொழிலபிவிர்த்தி, புத்திரசந்தானம், தெய்வதுணை உண்டாகும்; செய்வினை, பேய் பிசாசு நீங்கும். சத்து 1-க்கு ரூபா 2. 6 சத்துகள் ரூபா 10.

பரம்பரையும் அநேக பரிசுகள்
மேடல்கள் பெற்ற
C மலையப்பசாமிபிள்ளை,
நித்தியானந்த மேடிக்கல் ஹால்,
(H. 19). பழனி. S. I.

---

உலகேங்கும்புகழ்பெற்றநற்சாட்சிகள்பெற்றது

### புஷ்டிக்கு கைகண்ட ஜீவரத்ன எலக்ட்ரிக் மாத்திரை.

ஒரு முறை தருவித்துப் பாருங்கள்!!

புஷ்டிக்கு இதற்கு நிகரானது ஒன்றுமில்லை. பரீக்ஷைக்கு ஒரே குளிகை போதும்; இழந்துபோன பலத்தை திரும்பக் கொடுக்கும்; நரம்புத் தளர்ச்சியடைந்து வருந்துவோர்க்குத் திவ்விய ஔஷதம். இல்வாழ்க்கையில் இன்பத்தைக் கொடுத்து ஊக்கத்தை தருவதில் இதற்கு மிஞ்சின அவுஷதமில்லை.

150 பில்ஸ் ரூ. 10. 50 பில்ஸ் ரூ. 4-0-0
20 பில்ஸ் ரூ. 2. வி. பி. சார்ஜ் வேறு.

### பிரமேக நிவாரணி.

ஒரே வேளையில் உங்கள் கஷ்டத்தை நிவர்த்திசெய்யும். பொறுக்க முடியாத வெள்ளை வெட்டை, நீர்கடுப்பு, எரிச்சல், ரத்தமேகம், தந்திமேகம், உடனே நிற்கும். 1-புட்டி ரூ. 2

### பிளேக் மாத்திரை.

சுரம்கட்டி கண்டவுடனே ஒரு மாத்திரை சாப்பிட்டால் 9 மணி நேரத்தில் சுரத்தை நிறுத்தும்; ஜன்னி தோஷம் வராது. புட்டிக்கு ரூ 2. கட்டிக்கு பிளாஸ்திரி ரூ. 1.

T. R. கருப்பண பிள்ளை,
(Q. 41.) வைத்தியசாலை, பழனி. S. I.

---

### காகிநாடா சேலை.

16 முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இந்தச் சேலைகள் வெள்ளை மல்லில் சிவப்பு, கறுப்புச்சேர்ந்த சாக்லெட் நிறம் போல், பூக்கள் புட்டாக்கள் போட்டு, சுற்றிலும் எழுத்துவேலையில் கரைகட்டியிருக்கும். இது புதுமாதிரி. இதுவரைக்கும் தயாரானதில்லை. விலை ரூபா 5—8—0.

### வெள்ளிக்கெண்டைச்சால்வை.

$5\frac{1}{2}$ முழ நீளம்; $2\frac{1}{2}$ முழ அகலம்.

இது மிகவும் நேர்த்தியாகவும் பளபளப்பாகவும் கைஸ் நூலினால் செய்யப்பட்டதுமான சால்வை.

ஒரு இஞ்சு வெள்ளிக் கெண்டைப் பட்டையுள்ளது. விலை ரூபா 7—0—0.

விலாசம்:— கனக அண்டு கம்பெனி.
(Y. 18.) பார்க்டவுன் போஸ்ட், மதராஸ்.

---

### தேக்கமரம்.

திறமான பர்மாதேச தேக்கமரம் தீராந்திகள். நீளம், 10 அடி தொடக்கம் 35 அடி வரையிலுள்ளன. கனம் 12 அங்குலந் தொடக்கம் 18 அங்குலம் வரையிலுள்ளன. இவைகள் எம்மிடத்தில் விலைக்குக் கிடைக்கும்.

S. வீரகத்திப்பிள்ளை,
(H. 16) தொண்டமானாறு.

---

**பத்திரிகாபிமானிகள் தங்களால் வரவேண்டிய பத்திரக் கிரயத்தைத் தயைசெய்து காலதாமசமின்றி அனுப்பிவைப்பார்களாக.**

---

### ஓர் பிராமணோத்தமர் தேவை.

சிலங்கூர் இலங்கைத் தமிழர்சங்கத்தாரால் நடத்தப்படும் கோலாலம்பூர் 'ஸ்கொற்' வீதியிலிருக்கும் கந்தசுவாமி கோயிலுக்கு ஓர் பூசகர் வேண்டும். அவர் கந்தபுராணம், பெரியபுராணம், இராமாயணம், திருவிளையாடல் முதலான நூல்களுக்கு நன்றாயர்த்தம்பண்ணக்கூடியவராயும், இலக்கணம் படித்தவராயும், சம்ஸ்கிருதத்தில் போதிய அறிவுடையவராயும், உலகம் மதித்த வித்துவான்களினுடைய முறைமையான மாணவராயும், பரம்பரையான பிராமண குடும்பத்தைச்சேர்ந்தவராயு மிருக்கவேண்டும். அத்துடன் உற்சவாரம்ப(துவஜாரோகண)த்துக்கும், இரதோற்சவம் முதலியனவற்றிற்கும் உரியவராயிருக்கவேண்டியது. அவர் மிக மதிப்பாய் நடத்தப்படுவார். விபரங்களைக் காரியதரிசியிடம் அறிந்துகொள்ளுக.

சி. கந்தையா,
ஸ்ரீ கந்தசுவாமி கோயில்
(Q. 45) காரியதரிசி.

---

அகம் வந்தன! சிறந்த தினுசு! **கவனியுங்கள்** மகிழ் தந்தன! குறைந்த விலை!

## கிறீஸ்மஸ், பொங்கல்

நெருங்கிய பண்டிகைகள் வந்துவிட்டன!

தங்களை மகிழ்விப்பதும், அலங்கரிப்பதும்

## மனோரம்மிய நற் ஜவுளிகள்

விவரங்களுக்கு விரைந்தெழுதுக!

**இனும்!** தமிழ் கேட்லாக் **இனும்!**

உயர்ந்த சரக்குகளாய்க் குறைந்த விலைக்கு அனுப்பித் தருவோம் மறந்திடாதீர்கள்.

ராமராய் அண்டு கோ., மதுரை,
(தென் இந்தியா.)

(Mis. 412).

---

கனவான்களே! உடனே ஆர்டர் அனுப்புங்கள்!!

விலைசரசம்! உடைநயம்!! அருமையான தினுசு!!!

## சேலம் ஜவுளி தினுசுகள்.

எங்கள் கம்பெனியில் சேலத்தில்தயாராகும் சகல விதமான தினுசுகளிலும் நாட்டுக்கோட்டை நகரத்தார்களுக்கு விசேஷமாக பிடித்தமுள்ள தினுசுகளிலும், ஜோடி, துப்பட்டா, துயிலிமாதிரி அங்கவஸ்திரங்கள், பச்சாணுக்களும், நயம் 120 செ. 100 செ. 80 செ. நூலில் பலகலர் பட்டினாலும் வெள்ளி ஜரிகையினாலும் கரைகளுடையதும் பலவிதமான பேட்டுகள் வைத்து அற்புதமான வேலைப்பாடுடையதும் பட்டினாலும் ஜரிகையினாலும் பலவிதமான முந்திகள்போட்டதும் முந்தியில்சிட்டை போட்டதாகவும் கிடைக்கும். உடல் நயம் வெண்பட்டில் ஜரிகைப்பேட்டுஜோடி, துப்பட்டாக்களும், பலகலர்பட்டு முடிலேஞ்சிகளும், பலகலர்பட்டுகளில் அருகுமுந்தியில் ஜரிகையினால் பலவித உருவங்களமைத்து உடலில் ஜரிகைக் கொட்டடி போட்ட லேஞ்சிகளும் தயாராகிறது.

குறிப்பு:—எல்லா தினுசுகளும் நம்ம சொந்தத் தறிகளில் தயாராவதால் செசவு அழுத்தமாகவும் கோட்டமுள்ளதாகவும் அருமையான தினுசுகளாகவும் கிடைக்கும். விலை சகாயமாக எல்லா ஆர்டர்களுக்கும் வி. பி. யில் அனுப்பப்படும். வி. பி. தினுசு பிடித்தமில்லாவிடில் திருப்பியனுப்பி வேறு தினுசு பெற்றுக்கொள்ளலாம்.

தந்திவிலாசம், ஜவுளி சேலம், Javuli Salem. } கா. கோ. அ. வெ. கு. ஓபுளிசெட்டியார் & Co.,
ஜவுளிவியாபாரம் கொகை சேலம்.
(Q. 44)

# இந்து சாதனம்

யாழ்ப்பாணம்:— ருதிரோற்காரிஞு கார்த்திகைமீ 21உ வியாழக்கிழமை.

## பட்டினத்தெருவும் பாதசாரிகளும்.

மாதமோ கார்த்திகைமாதம்; காலமோ மாரிக்காலம். பட்டினத்தெருக்கள் அங்குமிங்கும் பள்ளமும், அப்பள்ளமெங்கும் வெள்ளமுமா யிருக்கின்றன. நடுத்தெருவிலே நடந்து செல்வதென்றாலோ முன்னும் பின்னும் வருகிற றிக்ஷா வண்டி, மாட்டுவண்டி, குதிரைவண்டி, மோட்டர் வண்டி என்னு மிவைகளுக்கு வழிவிலகுதற்கு ஒவ்வொரு நிமிஷமும் கானிலேயோடி யிறங்கவேண்டியிருக்கிறது. சற்று விலகி ஒருபக்கத்தில் நடந்துசெல்லலாமென்றால் வெள்ளமும் பள்ளமுமா யிருக்கிறது. இதுவே தக்க தருணமென்று பகிரங்க வேலைப்பகுதியாரும் தெருக்களைக் கொத்திக் கிளறிப் புரட்டிக் கொட்டி உருட்டிச் சீர்குலைத்துவிட்டார்கள். வண்டிகள் செல்லாத பக்கங்கள் வழியே ஒதுங்கிச் செல்லலாமோவெனில் இருபக்கங்களும் மலமும் பீங்கான்றுண்டுகளும்; இவைகளில்லாதவிடங்களிற் பகிரங்கப்பகுதியார் குவித்த கல்லுக்குவியலுமாயிருக்கின்றன.

கடவுள் உலகத்திலேயுள்ள மனிதர்களெல்லாரையும் ஓரே வகுப்பிற் படைக்கவில்லை சிலரைப் பெருஞ் செல்வர்களாயும் சிலரைப் பரமஏழைகளாயும் படைத்திருக்கிறார். சிலர் மோட்டோர் வண்டியிற் பிரயாணஞ் செய்யத் தகுந்தவர்களாயும், சிலர் குதிரை வண்டி மாட்டு வண்டி முதலியவற்றிற் பிரயாணஞ் செய்யத் தகுந்தவர்களாயுமிருக்கின்றனர். சிலர் இவைகளில் ஒன்றையேனும் வைத்துக்கொள்ளச் சக்தியற்றவர்களாய் உள்ளங்கால் வெள்ளைபாக நடந்தே போகவேண்டியவர்களாக விருக்கிறார்கள். எந்தவிடத்துக்கும் அபாயமில்லாமற் சென்று மீளுவது அரிது. பின்பகலில் தெருவீதிகளில் உலாப்போவார் போகாதொழிந்தனர். தெருவீதிகளில் நல்ல உடையுடன் செல்லக்கூடாமலிருக்கிறது. மோட்டர்ரதம் பின்னே அல்லது முன்னே வருவதைக் கண்டால், அல்லது அதன் சத்தம் கேட்டால் அநேகர் காலடி பிட்டத்திற்பட ஓடிச் சமீபத்தில் அகப்படும் படலைகளுள் மறைகிறார்கள். சிலர் தெருவோரங்களில் இருக்குந் திண்ணைகளில் ஏறிவிடுகிறார்கள். சிலர் பகிரங்கவேலைப் பகுதியாருடைய கல்லுக்குவியல்களின்மேலேறுகிறார்கள். இவைகளில் ஏதுமொன்றாவது அகப்படாதவர்கள் நெடுக ஓடுகிறார்கள். மோட்டோர்ப் பசாசுடன் எவ்வளவு தூரம் ஓட முடியும்! எப்படியும் அகப்பட்டுவிடுவார்கள். அப்பசாசுக்கு எதிரே யகப்பட்டால் அவர்களைக் கீழே வீழ்த்தி நெரித்துவிடும். பக்கத்திலகப்பட்டால் அவர்களுடைய உடையிலும் உடம்பு முழுவதிலும் பள்ளத்திலுள்ள வெள்ளத்தைச் சேற்றுடனேயள்ளி அவர்கள்மே லெறிந்துவிடும். இவ்விதமோசத்திலிருந்து தப்புவதற்காகவே பட்டினவாசிகளில் அநேகர் மாரிக்காலத்தில் மோட்டோரதம் என்றவுடன் பஞ்சப்புலன்களு மொடுங்கி ஓடியொதுங்கிவிடுகிறார்கள்.

சென்ற கிழமை ஒரு தினம் சிலர் மாலை ஆறுமணியளவில் ஒரு விவாக கொண்டாட்டத்திற்குப்புறப்பட்டார்கள். புறப்பட்டுச் செல்லும் வழியிலே அவர்களுக்குப்பின் ஒரு மோட்டோர் வண்டியின் சத்தம் கேட்டது. ஒரு பேராபத்திலகப்பட்டவர்கள் தம்முயிரைக் காக்கும்படி எவ்வளவு வேகமாக ஓடுகிறார்களோ அதுபோல அவர்களும் தம்வசமழிந்து ஓட்டம்பிடித்தனர். அவர்களுடை அதிஷ்டவீனத்தினால் படலையாவது உயர்ந்த திண்ணையாவது கல்லுக்குவியலாவது அகப்படவில்லை. என்செய்வார்கள் பாவம்! மொட்டோர் பசாசு அவர்களைத் தாண்டி முன்னுக்கோடி மறைந்தது. சந்தித்த இடமோ பள்ளமும் அப்பள்ளத்தில் வெள்ளமுமாயிருந்தது. அவர்களுடைய உடையும் உடம்பும் மான்றோலைப்போலப் புள்ளிவடிவமாக மாறின. இவ்வித அலங்கோலத்துடன் விவாக கொண்டாட்டத்துக்கு எப்படிப் போகத் துணிவார்கள். வீட்டுக்குத்திரும்பலாமென்றாலோ திரும்பும்வழியில் மனிதருடையமுகத்தில் விழிப்பதெப்படி? இந்த அலங்கோலத்துடன் ஒருவரையொருவர் பார்த்தார்கள்; தங்கள் உடையை வெறுத்தார்கள்; ஒவ்வொருவரும் தம்மைத் தாமே வெறுத்தார்கள்; நகரவாழ்க்கையை வெறுத்தார்கள்; மோட்டோர்ரதத்தை வெறுத்தார்கள்; மாரிக்காலத்தை வெறுத்தார்கள். அவர்களுடைய அதிஷ்டவசத்தால் இராக்காலம் வந்தது. இந்த அபாயமான தருணத்தில் "இவ்விராக்காலம் செய்த நன்மைக்கு என்ன கைம்மாறு செய்வோம்" எனக்கூறி மணவீட்டுக்குப் போவதைவிடுத்து மனத்துயரோடு ஒருவாறு தந்தம் வீட்டுக்குப் போய்ச் சேர்ந்தார்கள்.

கொழும்பு கண்டி முதலான பிரதான பட்டினங்களில் விளையும் அபாயங்களைப் போன்ற அபாயங்கள் இங்கே இதுவரையில் நேரவில்லையாயினும் அவ்வித அபாயங்கள் காலகதியில்நிகழுமென நாம் காத்திருக்கவேண்டும். பட்டினபரிபாலன சங்கத்தார் சனசஞ்சாரம் அதிகமான தெருக்களை ஒழித்து வேறு தெருவீதிகளால் மொட்டோர்ரதங்கள் போக்குவரவு செய்தற்காகிய ஒழுங்குகளைச் செய்தல்வேண்டும். இல்லையேல் கொழும்பு முதலிய இடங்களில் கற்படுத்தப்பட்ட மார்க்கங்கள் (Pavements) அமைக்கப்பட்டிருப்பனபோல இங்கேயும் பாதசாரிகள் நடந்து போவதற்காக அவ்வித கற்படுத்தப்பட்ட மார்க்கங்கள் தெருவோரமாக அமைக்கப்படுதல்வேண்டும். ஆனால் இங்ஙனஞ் செய்தற்கு அதிக பொருள் செலவிடவேண்டிவரும்,

## ஆன்ம விசாரம்.

(ஓர் பிராமணோத்தம ஸாது எழுதியது)

மனமே! இன்பமுஞ் சரியே துன்பமுஞ் சரியே; ஒன்றிலும் நினைப்பு வேண்டியதுமில்லை; ஒன்றிலும் பேச்சு வேண்டியதுமில்லை. நீ குற்றவாளியாயிருக்கும் வரையும் பிறரைக் குற்றங் கூறுவது பக்ஷபாதம்; இன்னும் அது பொறுமையின் காரணமாம்.

திருத்தத்துக்காகப் பிறரைக் குற்றங் கடிகிறேன் என்பையாயின், தனது அஞ்ஞானத்தை அகற்றவிரும்பி முயலும் ஒருவனுக்கே, அவனும் வேண்டிக்கொண்டவழி இயையும். இங்ஙனமன்றி இன்பதுன்ப நிமித்தமாகப் பிறரைக் குற்றங் கழைந்து திருத்துவது அவசியமற்ற காரியம்.

குற்றவாளி (அஞ்ஞானி) தான் அழுக்காறு கோபம் முதலிய துர்க்குணத்தாற் பிறனிடத்துக் குற்றங்களையே காண்பான். குணவாளி (மெய்யுணர்வாளி) அருள் என்னும் குணம் கைவந்தமையால் பிறரிடத்திலே குற்றங்காண விரும்பான். குற்றம் புலப்படினும் அதற்காக இரங்குவான். தான் குணநயம் உடையனாதலின் பிறரிடத்தும் அவற்றைத் தேடிக் கண்டு வியப்பான்.

அன்பு, தனக்கு இன்பந்தருவார்க்கண் உள்ள பிரீதி. அது தன்னைப்போல அவர்களைப் பாவித்தலால் நிகழ்வது. விருப்பு வெறுப்பு அற்றவர்களுக்கு அவ்வன்பே பிறர் மாட்டு அருளாய் மாறிவிடும்.

பிறரிடத்தே அவரிடம் பெறும் இன்ப நிமித்தமாக அவரிடம் வைக்கும் பிரீதி அன்பு எனப்படும். பிறர் அடையும் துன்பங் கண்டு அதுநிமித்தம் அவரிடை வைக்கும் பிரீதி இரக்கம் எனப்படும்.

தான் பெறும் இன்பநிமித்தமாக அப்பிறரிடை உண்டாவது அன்பு தமது அன்புக்குரியார் துன்புறுவது கண்டு உண்டாகும் இரக்கம், அவரால் தமக்குக் கிடைக்கும் இன்பத்துக்காகவே.

ஈசுவரன் நமக்குப்புத்தி குறைந்த சமையத்தில் தெரிவித்து உதவி செய்வான்.

அறிவாளி, தன்னிற் றாழ்ந்தவர்களது அறிவினளவுணர்ந்து அதற்குத் தக்கவிதமாய் நடக்கவேண்டும். அல்லாத பக்ஷம் அவன் குற்றவாளி. குழந்தைக்கு முன்னே நெருப்பை வைத்தால் அது தன்னைச் சுட்டுக்கொள்ளும் என்பது அறிவாளி தெரிந்த விஷயம். அப்படிச் சுட்டுக்கொள்ள வைப்பது அறிவாளியின் குற்றமல்லாது குழந்தையினதன்று.

சாத்தன் என்பவன் கொற்றனைப் புறங்கூற, அதுசமையத்தில் கொற்றன் அதனைப் பக்கத்தில் நின்று கேட்டுக்கொண்டான். பின்பு கொற்றன் அதுநிமித்தமாகச் சாத்தனோடுசண்டைக்கு முயன்றான். அப்பொழுது சாத்தன் கூறிய சமாதானம்: கொற்றா, பொறு பொறு, நான் உன்னை இகழ்ந்தது ஒருபக்கம் இருக்கட்டும்; நீ கேட்கத்தக்க எளிதாக நான் பேசியது தான் குற்றம் என்றான்.

ஒருவனுக்கு ஏதும் நன்மைசெய்திருப்பதினும், அவனிடம் ஏதும் தீங்கு செய்யப் பெற்றிருப்பது அதாவது துன்பம் பெற்றிருப்பது பெரும் நன்மை.

ஒருகாலமும் பிறனுக்கு ஒருவிதமாகவேனும் வெறுப்பு உண்டாகாமல் நடந்துகொள்.

பிறனுக்கு உனது நடையால் ஒருவித இன்னலையும் உண்டாகாமல்நடந்துகொள் இது பெரும் சாமர்த்தியம்.

மானமுடையவனிலும் அது கெட்டவன் நமக்கு நல்லவன். அவன் நம்மிடம் இரந்து நம்மைத் தியாகியாக்கிறான்.

அகங்காரம் தன் பயன் நுகர்ந்தாற்றான் கழியும். ஒவ்வொருவித ஆசையும் இங்ஙனமே; கோபம் பொறாமை முதலியவும் இங்ஙனமே; ஒன்றை அநுபவித்துத் தீரவேண்டுமேயல்லாமல் எல்லாவற்றையும் சற்போதனை யான் மட்டுந் தீர்ப்பது இயலாது; போதனை அநுபவம் இரண்டும் வேண்டும்.

மெய்யுணர்வாளி தீங்குகளை ஆன்மாவாகிய தனக்குக் கெடுதியென்று அகற்றுகிறான். லௌகிகன் தனக்குத் துன்பத்துக்கிடமாகிறதென்றும் இன்பத்துக்கு இடையூறென்றும் ஒருவாறு தீங்குகளை அகற்றுவான். இது யோக்கியத்துட்பட்டதல்ல. ஆன்மலாபத்துக்கு இடையூறு என்று விலக்குபவனிலும் அருளால் விலக்குபவனே யோக்கியன்.

நீ அகங்காரி என்று பிறரைக் கண்டிக்கிறவனும் அகங்காரி.

நீ எப்பொழுது சரிப்பட்டாய் என்பதற்கு அறிகுறி: நிகழ்வதை யெல்லாஞ் சரியென உன் மனம் எப்பொழுது உடன்பட்டதோ அப்பொழுது நீ சரிப்பட்டாய்; அப்பொழுது உனக்கு வாக்கும் இறந்தது; மனமும் இறந்தது.

### ஒப்பு.

இதில் அனைத்தும் அடங்கும்.

௧. இருவினை ஒப்பு.
௨. அனைத்தையும் நடுவு நிலைமையாக ஒப்பு.
௩. எல்லாம் திருவருளாய் ஒப்பு.
௪. தான் பிறர் என்னும் வேறுபாடில்லாமல் ஒப்பு.
௫. யாவரையும் அருளாய் ஒப்பு.
௬. எல்லாச் சீவரும் ஒன்றென ஒப்பு.
௭. எல்லாத் தெய்வமும் ஒன்றெனஒப்பு.
௮. தனக்கு ஈசுவரன் தரும் சுகபோகங்களை நமக்கு இது அமையும் என்னும் திருப்தி ஒப்பு.
௯. தனக்கு ஈசுவரன் ஊட்டும் துன்பத்தை வேண்டாம் என்று வெறுக்காமல் உடன்படல் ஒப்பு
௧0 நிகழ்வதெல்லாம் சரியென்னும் ஒப்பு.

## பிறவிப் பெரும்பயன்.

(சித்தாந்தம்)

### பிறவி.

நமக்குப் பிறவி எத்தன்மையாக இருக்கிறதென்றால் ஒரு ஊஞ்சலைப்போல் இருக்கிறது. ஒரு பெரிய விருக்ஷத்தினிடமாக ஒருவன் வைக்கோல் பழுதையை ஊஞ்சல் கட்டி ஆடுவானானால் இங்கும் அங்குமாக ஆடும்போது அறுந்துவிடுமாயின் பூமியில் விழுகின்றான். அதுபோல் பிறப்பும் இறப்புமாகிய ஊஞ்சல் நமக்கு அறுமாயின் பரமேஸ்வரப் பிரபுவினுடைய திருவடியே இடமாகும்.

நமது பிறப்பும் இறப்பும் சரீரத்திற்கேயன்றி ஆன்மாவிற்கன்று.

பிறப்பும் இறப்பும் உடைய நாம் பிறப்பும் இறப்பும் இல்லாத பரமேஸ்வரப் பிரபுவினுடைய திருவடி எவ்விதம் நமக்கு இடமாகுமெனக் கருதப்படாது. அந்தப் பிரபுவிற்கு நம்மைப்போல் பிறப்பும் இறப்பும் இருப்பின் நாம் அவரை யடைதல் எங்ஙனம?

நாம் இந்த மனிதஜன்மத்தைப் பெற்றுவந்ததின் அருமையை நன்றாய்ப் பன்முறை சிந்திக்குமிடத்து சமுத்திரத்தைக் கையினால் நீந்திக் கரையேறியதை நிகர்க்கும்.

ஆன்மாக்களுக்குப் பிறப்பு நான்கு வகைப்படும். (அவையாவன) அண்டசம், சுவேதசம், உற்பிச்சம், சராயுசம். இவைகளின் விரிவு எண்பத்து நான்கு நூறாயிர பேதமாகும். இதுபற்றியே நமது குமரகுருபர சுவாமிகளும் 'ஆறேழிரட்டி நூறாயிரத்த" என்றருளினர். அந்தப் பேதங்களெல்லாவற்றிலும் நீங்கி மனிதப் பிறப்பிலே வருதல் மிக அருமையாகும். இதுபற்றியே "அரிது அரிது மானிடராத லரிது" என்றார் ஆன்றோர். இத்தகைய மனிதப் பிறப்பை எடுப்பினும் கூன், குருடு, செவிடு, நோய் முதலியவைகளாற் பீடிக்கப்படாது நல்ல மனித யாக்கையைப் பெறவேண்டும். இதனைப் பெறினும் முழுமுதற் கடவுளே பதியெனக் கோடல்வேண்டும்.

இதுபற்றியே "அண்டசஞ் சுவேதசங்களுற்பிச்சஞ் சராயுசத்தோ, டெண்டருநா லெண்பத்துநான்கு நூறாயிரத்தா, லுண்டு பல்யோனி யெல்லா மொழித்துமா னுடத்துதித்தல், கண்டிடிற் கடலைக்கையா னீந்தினன் காண்" எனச் சிவஞான சித்தியாரிலும் கூறப்பட்டுள்ளது.

இனி இந்த மக்கட்பிறப்பைக் கைவிடுவோமானால் மறுபிறவி என்னவிதமாமோ அறியேம். இதுபற்றியே "இப்பிறவி தப்பினால் எப்பிறவி வாய்க்குமோ" என்றார் அருட்பெருஞ்செல்வர்.

நமது ஸ்ரீ மணிவாசகசுவாமிகளும், "புல்லாகிப் பூடாய்ப் புழுவாய் மரமாகிப், பல்விருகமாகிப் பறவையாய்ப் பாம்பாகிக், கல்லாய் மனிதராய்ப் பேயாய்க் கணங்களாய், வல்லசுரராகி முனிவராய்த் தேவராய்ச், செல்லாஅ நின்ற வித்தாவரசங்கமத்து, ளெல்லாப் பிறப்பும் பிறந்திளைத்தே னெம்பெருமான்" என்றருளினர்.

### பெரும் பயன்.

"ஊனடைந்த உடம்பின் பிறவியே
தானடைந்த வுறுதியைச் சாருமால்
தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுண்
மாநடஞ்செய் வரதர்பொற் றாடொழ."

பொருள்: தேனடைந்த மலர்ப்பொழிற் றில்லையுள் - தேன் பொருந்திய மலர்களையுடைய சோலைசூழ்ந்த சிதம்பரமென்னுந் தலத்தில், மாநடஞ்செய்வரதர் பொற்றாள் தொழ - பெரிய ஆனந்த நிருத்தஞ் செய்தருளும் நடேசப்பிரானது அழகிய குஞ்சிதபாதத்தைத் தரிசித்தால், ஊனடைந்த உடம்பின் பிறவியே - மாமிசம் பொருந்திய உடம்பானுய மக்கட்பிறப்பே, தானடைந்த உறுதியைச் சாரும் - தான் நிலவுலகத்திற் பிறந்த பயனை அடையும்.

இனி மக்கட்பிறப்பு புருடார்த்தங்களுட் சிறந்த வீடு பேற்றிற்குக் காரணமாதலால் "தானடைந்த" என்றும் தரிசித்தல் காரணமாய் வீடுபேறடைதலில் "உறுதியைச் சாரும்" என்றும் அருளினர்.

ஊனுலாய உடம்பின் பிறப்பென உடம்போடுயிர்க்கு ஒற்றுமை நயம்படக் கூறினர். கூறினரேனும் பயனடைவது உயிரென்பது கருத்து.

இது தில்லையில் ஆனந்த நடனம் தரிசித்தல் நேரே வீடடையும் நெறியெனக் குறிப்பா லுணர்த்தி நின்றது. பயன்படாது கழிந்த பிறவிகளினின்றும் பிரித்தமையின் ஏகாரம் பிரிநிலை. வரதர் பொற்றாடொழ பிறவி அடைந்த உறுதியைச் சாருமெனக் கூட்டற்பாலது.

நமது ஸ்ரீ சேக்கிழார் சுவாமிகள் மற்றொரு இடத்தில்:

"தெண்ணிலா மலர்ந்த வேணியா யுன்றன்
திருநடங் கும்பிடப் பெற்று
மண்ணிலே வந்த பிறவியே யெனக்கு
வாலிதா மின்பமா மென்று
கண்ணிலா னந்த வருவிநீர் சொரியக்
கைம்மல ருச்சிமேற் குவித்து
பண்ணினா னீடி யறிவரும் பதிகம்
பாடினார் பரவினார் பணிந்தார்".

தெண்ணிலா மலர்ந்தவேணியாய்-தெளிவான இளம்பிறை தங்கிய சடையையுடையாய், உன்றன் திருநடங் கும்பிடப் பெற்று - உன்னுடைய ஆனந்த நிருத்தத்தைத்தரிசிக்கப்பெறுதற்கு,மண்ணிலே வந்த பிறவியே-நிலஉலகத்தில் வந்த மானிடப் பிறவியே, எனக்கு வாலிதா மின்பமாமென்று-எனக்குமேலான இன்பமென்று, கண்ணிலானந்த வருவிநீர் சொரிய - கண்களினின்றும் ஆனந்த வருவி சொரிய, கைம்மலருச்சிமேற் குவித்து - கரகமலங்களைச் சிரசின்மேலேறக் குவித்து, பண்ணினா னீடியறிவரும் பதிகம்-இசையோடு கூடி யறியத்தக்க திருப்பதிகத்தை, பாடினார் பரவினார் பணிந்தார்-பாடித் துதித்து வணங்கினார்".

(குறிப்பு)

"உன்றன் திருநடங் கும்பிடப்பெற்று" என்பதை நினது ஆனந்த நிருத்தத்தைத் தரிசிக்கப் பெறுதற்கு என நான்காம் வேற்றுமை உருபாகப் பொருள் கோடல் வேண்டும்.

பிரம்ம விஷ்ணு ருத்திர மும்மூர்த்தி தலமாகிய திருப்பாண்டிக்கொடுமுடி என்னுந் திவ்விய தலத்தின்கண் நமது ஸ்ரீ சுந்தரமூர்த்தி சுவாமிகளும்:

"மற்றுப்பற்றெனக் கின்றிநின் திருப்பாதமே மனம் பாவித்தேன், பெற்றலும் பிறந்தேனினிப் பிறவாத தன்மைவந் தெய்தினேன்" என அருளிச்செய்தார்கள்.

இன்னும் நமது ஸ்ரீ வாகீசப்பெருமான், "கருவுற்றிருந்து கழலேநினைந்தேன்" எனவும்,

"கருவுற்ற நாண்முதலாக வுன்பாதமே காண்பதற்கு, உருகிற்றென் னுள்ளமு நானுங்கிடந்தலந் தெய்த்தொழிந்தேன், திருவொற்றியூராய் திருவாலவாயாய் திருவாரூராய் ஒருபற்றிலாமையுங் கண்டிரங்காய் கச்சி யேகம்பனே" எனவும்,

"புழுவாய்ப் பிறக்கினும் புண்ணியா வுன்னடி யென்மனத்தே வழுவாதிருக்க வரந்தர வேண்டும்" எனவும்,

"மதியஞ்சூடும் ஐயனூர்க் காளாகி" எனவும் அருளினர்.

"பிறவிப் பெருங்கட னீந்துவர் நீந்தா ரிறைவ னடி சேராதார்". என்றார் நாயனர்.

"மானுடப் பிறவிதானும் வகுத்தது மனவாக்காய - மானிடத்தைந்துமாடுமரன் பணிக்காகவன்றோ"எனச் சிவஞானசித்தியாரினும் கூறப்பட்டுள்ளது.

## சமாசாரம்.

காலநிலை:—பகலில் வெய்யிலும் இரவில் பனியுமாகவிருக்கிறது. இடையிடையே மழைக்கோலமும் சிறுதூறலுமிருந்தாலும் பெருமழையில்லை

காரைநகர் இந்துவாலிபசங்கம்:—இச்சங்கத்தாரின் நிகழும் கார்த்திகை மீ 16 ந் உ (1-12-23.) சனிக்கிழமை பிற்பகல் நாலுமணியளவில் (தேவாரவகுப்புமுடிந்தபின்பு) இச்சங்க புத்தகாலயத்தில் தேவாரம் ஸ்ரீமத் க. செல்லையாக்குருக்கள் அவர்களால்"திருமுறைப்பெருமை" என்னும் விஷயமாக ஓர் சிறந்த பிரசங்கஞ் செய்யப்பட்டது. பிரசாரகர் ஏறக்குறைய மூன்றுமணி நேரமளவில் திருமுறைகள் பன்னிரண்டையும் ஒவ்வொன்றாக எடுத்து அவைகளின் மகத்துவத்தைப்பற்றி நன்கு விளங்கப்படுத்திச் சைவசமயகுரவர்கள் நால்வருந் தேவாரதிருவாசகங்களைப்பாடிச் செய்த அற்புதங்களை எடுத்துத் தேவாரபாராயணத்துடன் விளங்கப்படுத்தினர். பிரசாரகர் சைவசமய அன்பர்கள் தேவாரதிருவாசகங்களை அன்புடன் ஓதிவந்தாற் பரம்பொருளை யடையலாமென விளங்கப்படுத்தினர். பிரசங்க ஆரம்பத்திலும் முடிவிலும் தேவாரபாராயணஞ் செய்யப்பட்டது. கடித.

இறந்து கிடந்தாள்:—அம்பவெலா புகைரத ஆபீசுக்குச்சமீபத்தில் ஒருசிங்களப்பெண்புகைரதத்துள் அகப்பட்டு இறந்து கிடக்கக் காணப்பட்டாள்.

தற்கோலை:—அநுராசபுரப் புகைரத வீதியில் 123-ம் மைலில் அப்புகாமி என்னும் ஒரு சிங்களவன் புகைரதத்தினுல் நெரிக்கப்பட்டு உடல்வேறு தலைவேறாகக் கிடக்கக்காணப்பட்டான். அவன் தற்கொலை செய்தற்கு முதனாள் மிஸ்றர் H R. பிறீமன் துரைக்கு ஒரு கடிதம் எழுதி அதனைப் பத்துவயதுள்ள தன் மூததமகளிடம் கொடுத்து அடுத்தநாள் அதிகாலையில் தற்கொலை செய்தான். அக்கடிதத்தில் தான் கொலை செய்வதற்குச் சென்ற ஆறுவருடகாலமாக ஆசைப்பட்டிருந்ததாகவும் தன்னுடைய இரண்டுபிள்ளைகளையும் பாதுகாத்துக் கொள்ள வேண்டுமென்றும் எழுதப்பட்டிருந்தது.

ஒரு ஐரோப்பியரின் அறுப்தலும் விறந்தும்:—கொழும்பில் G. O. H. ஹோட்டலில் வசித்தவராகிய மிஸ்றர் G. H. ஜேக்கேர்ஸ் என்னுமொரு ஐரோப்பியர் இந்தியவியாபாரியாகிய R. டேவிரும் என்பவருடைய கடைக்குச் சென்று ரூபா 225 சதம் 50 க்கு பட்டுச் சட்டைகளும் சீலைகளும் வாங்கிக் கொண்டு தனக்குப் 'பில்' அனுப்பும்படியும் தானிருப்பது கைஹோட்டலில் 628-ம் இலக்கமுள்ள அறையிலென்றுங் கூறிப்போயினர். வியாபாரி அங்கு சென்று விசாரித்தபொழுது ஜேக்கேர்ஸ் எனனுமொருவர் இங்கேயில்லை என்றுதெரிவிக்கப்பட்டது. இவ் ஐரோப்பியதுரை இதுபோன்ற அறுப்புதலைக் கண்டியிலும் செய்திருக்கின்றாரென அறியப்படுகிறது. இப்பொழுது குறித்த ஐரோப்பியதுரை உடப்பு சலாவையிலிருக்கிறதாகவும் அவரைப்பிடிக்கும்படி கொழும்பு பொலிஸ்கீதிபதி விறூந்துவிட்டிருக்கிறதாகவும் தெரிகிறது.

மோட்டோர் யமன்:—சென்ற வருஷத்தில் பிரிட்டனில் மோட்டர்க்கார் யமனாகத்தோன்றி 1894 பேரை விண்ணுலகிற்கு இட்டுச் சென்றிருக்கின்றது.

ஓர் தேசாதிபதி குற்றஞ்சாட்டப்பட்டார்;—இந்தியானு தேசாதிபதி கள்ளக்கையெழுத்திட்டு, பணத்தை யெடுத்துக்கொண்டதாகக் குற்றஞ் சாட்டப்பட்டிருக்கிறார்.

காற்று வீசும் மெத்தை:—அமெரிக்காவில் ஒரு சாஸ்திரி நூதனமான மெத்தை யொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். சயனத்தில் படுத்திருப்போர் திரும்பிப் படுக்கும்போது உண்டாகும் அசைவினுல் நித்திரைப்பங்கம் வாராதபடி திரும்பிப்படுக்கும் பக்கத்திலிருந்து மனோகரமான காற்று எழுந்து படுத்திருப்பவர்மீது வீசுகின்றதாம்.

ஸ்ரீமதி சரோஜினி தேவி:—மொம்பாசாவில் நடைபெறப்போகும் கீழ் ஆபிக்காவின் இந்தியர்களின் காங்கிரசுக்கு ஸ்ரீமதி சரோஜினி தேவி அக்கிராசனம்வகிக்க ஒப்புக்கொண்டிருக்கிறார்' ஸ்ரீமாக் எம். எ. தேசாய், ஜார்ஜ் ஜோசப், பெனர்சி தாஸ், சதுர்வேதி முதலிய தலைவர்களும் ஸ்ரீமதி சரோஜினிதேவியுடன் டிசம்பர் மாசம் 12 ந் திகதியன்று "கண்டாலா" என்ற கப்பலில் மொம்பாசாவுக்குப் புறப்பட்டுச்செல்வார்கள்.

மோட்டோர்பாசாகுகளின் தொகை அதிகரிக்கிறது:—அமெரிக்காவிலுள்ள பிரபல மோட்டோர்த் தொழிற்சாலையான போர்ட்டு மோட்டோர்த் தொழிற்சாலையில் இப்பொழுது தினந்தோறும் 7500 மோட்டோர் வண்டிகள் செய்யப்பட்டு வருகின்றன. இவ்வருஷத்தில் மொத்தம் 20லக்ஷம் மோட்டார்கள் செய்யப்படுமாம். அடுத்தவருஷம்பிப்ரவரிமீ முதற்கொண்டுதினந்தோறும் பதினுயிரம் மோட்டார் வண்டி செய்து முடிப்ப தற்குண்டான ஏற்பாடுகள் நடந்துவருகின்றன. ஒவ்வொரு மோட்டோர் வண்டி மூலமாக அக்கம்பெனியாருக்கு 90 டலர் லாபங் கிடைக்கிறதாம்.

விதியின் விசித்திரம்:—நியூயார்க்கில் வசிக்கும் ஜப்பானிய கம்பெனி உத்தியோகஸ்த ரொருவர் ஜப்பான் பூகம்பத்திற் கப்பால் டோகியோவில் தமது மனைவி மக்களுடைய க்ஷேமத்தை அறிய ஆவலுடன் முயன்று வந்தார். இரண்டுவாரங்கள்வரை ஒன்றும்தெரியவில்லை. கடைசியாக அவருக்கு ஒருநண்பர் அவருடைய குடும்பம் நாசமாகிவிட்டதாகத் தந்தியடித்தார். துயரம் பொறுக்க மாட்டாமல் ஒரு பெரிய கட்டிடத்தின் பதினேந்தாவது மாடியினின்று நடுத்தெருவில் கீழே குதித்து உடல் நசுங்கி உயிர் விட்டார். மறுநாள் 'தாமதப்பட்டது' என்று குறித்த ஒரு தந்தி ஆபீசுக்கு வந்தது. அதில் "முதலில் தெரிவித்த செய்தி தவறு. மனைவி தன் அன்பைத் தெரிவிக்கிறாள்" என்றிருந்தது.

"பணம்."

### கோலையும் தற்கோலையும்.

மசூலிப்பட்டணத்தில் ஒபின்வியாபாரியான கொதப்பல்லி ஹனுமந்தராவ் என்பவர், தனது மனைவியின் நடத்தையில் சந்தேகங் கொண்டு சென்ற 22உ இரவு, தனது வீட்டின் மேன்மாடியில் அவளைத் துப்பாக்கியாற் சுட்டு வீழ்த்திவிட்டு தாமுந் தற்கொலை புரிந்துகொண்டார். தாமே இக்கொலையைச் செய்ததாகவும், ஆகவே பொலீசார் வேறு எவரையும் பிடித்துத் துன்புறுத்தவேண்டாமென்றும் அவர் ஓர் கடிதத்தில் எழுதி சுவரில்ஒட்டிவிட்டுத் தற்கொலை புரிந்துகொண்டார். இதற்கு முன்பாகவே அவர் தனது செல்வத்தில் ரூபா 4-ஆயிரத்தை தனது தவ்வை பேருக்கும், தனது சகோதரன் பேருக்கு ரூபா 4-ஆயிரமும், மீதியைத் திருப்பதி வெங்கடாசலபதிகோயில்பேரிலும் எழுதி வைத்திருக்கிறார்.

### நூதனமான கடிகாரங்கள்.

ஒரு அமெரிக்க என்ஜினியர் நூதனமான கடிகாரமொன்றைக் கண்டு பிடித்திருக்கிறார். அக்கடிகாரம், சரியான நேரம் காட்டுவதுடன் கம்பியில்லாத்தந்தியின் மூலமாய் அதன் தொடர்பாய் அமைக்கப்பட்டிருக்கும் மற்ற அநேக கடிகாரங்களையும் சரியானநேரத்தைக் காட்டும்படி செய்கிறது! காலப்போக்கில் ஒரு ஊரின் பொதுவிலுள்ள எல்லாக் கடிகாரங்களும் ஒரே நேரத்தைக் காட்டும் வண்ணமாய் மேற்கூறிய உபாயத்தாற் செய்யப்படலாம் என ஓர் கம்பில்லாத் தந்திநிபுணர் அபிப்பிராயப்படுகிறார்.

உலகத்திலுள்ள மிக்க ஆச்சரியமான கடிகாரங்களிலொன்று வேல்ஸ் கதீட்ரல் என்ற கிறீஸ்தவ கோயிலிலிருக்கிறது இது ஒருசந்நியாசியால் 600 வருடங்கட்குமுன் செய்யப்பட்டது. இக்கடிகாரத்தில் ஆயுதந்தரித்து குதிரைமேல் ஏறிக்கொண்டிருக்கும் யுத்த வீரர்களின் படங்கள் காணப்படுகின்றன. இவைகளே மணிகளைக் காட்டுபவை. இவ்வுருவங்கள் ஒன்றையொன்று எதிர்த்துத்தாக்கி ஈட்டியாற் சண்டைசெய்து கொள்ளுகின்றன. எத்தனை முழுமணியாகிறதோ அத்தனை முறைகள் ஈட்டிகளாற் சப்தங் கேட்கும்படி தாக்கப்படுகின்றது.

லண்டன் வாடர்லூஸ்டேஷனில் ஒரு நூதன கடிகாரம் இருக்கிறது. அதற்கு மணிகாட்டும் பாகம் ஒன்றுதானிருக்கிறதே யொழிய மற்ற வேலைசெய்யும்பாகம் யாதொன்றும் இல்லை. காரணம் யாதெனில் தூரத்திலுள்ள இன்னொரு பெரிய கடிகாரத்துடன் சேர்க்கப்பட்டு அதன் சக்தியைக்கொண்டு இது இயங்குகிறது.

இவைகள் நீங்கலாக, தனக்குத் தானே சாவி கொடுத்துக்கொள்ளக் கூடிய கடிகாரம் ஒன்று வல்லாசி என்ற எஞ்சினியரால் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. "தேசோபகாரி"

### ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்கள் குருபூஜை

சிவநேயச்செல்வராயும் செந்தமிழ்ப்பராயும் பேரறிவாளராயும் விளங்கி எம் யாழ்ப்பாண நாட்டைக் காக்கவந்த ஸ்ரீலஸ்ரீ. நாவலர்பெருமானவர்கள் குருபூஜை, நிகழும் கார்த்திகைமீ 15-ந் திகதியாகிய சென்ற வெள்ளிக்கிழமையன்று கொழும்பு விவேகானந்தசபை மண்டபத்தில் பல சிவநேயச் செல்வர்கள் சமுகத்தில் கௌரவ ஸேர் பொ. அருணாசலமவர்களின் அக்கிராசனாதிபத்தியத்தின்கீழ் வெகு சிறப்பாக நடத்தப்பெற்றது. அத்தருணம் ஸ்ரீலஸ்ரீ. நாவலரவர்கள் திருவுருவப்படமொன்று சபை மேடையி லியற்றப்பெற்ற பீடத்தின்மீது வைக்கப்பெற்றிருந்தது. சாயந்தரம் 6மணி யளவில் ஸ்ரீமாக். அருணாசலந்துரை யவர்கள் அக்கிராசனத் தமர்ந்தனர். தேவாரபாராயணத்துடன் கூட்டம் ஆரம்பமாயது. பின் நாவலர்பெருமானைக் குறித்து பண்டிதர் க. சிதம்பரநாதனவர்களாற் பாடப்பெற்ற சில பாட்டுக்கள் படிக்கப்பெற்றன அதன் பின்பு குலசைத் திருவள்ளுவ ரகத்தர் பண்டிதர் ப. இராமநாதனவர்களாலும், ஸ்ரீ முதல்லதம்பி ஆசிரியரவர்களாலும், பண்டிதர் ஏ. தாஸ் அவர்களாலும் நாவல ரவர்கள் புகழ் விரித்துக் கூறப்பட்டது. சபைத் தலைவரவர்கள் நாவலரவர்களைப்பற்றிக் கூறவந்தவிடத்து, அப்பெரியாரைப்போற் சைவத்துக்காகவும், தமிழுக்காகவும், எம்நாட்டுக்காகவும் உழைத்தவந்தாரெவரையும்பற்றிச் சில நூற்றாண்டுகளடங்கிய பெருங் கால எல்லைக்குள்ளும் தாம் கேட்டதில்லையெனவும், தமது சிறிய கால எல்லைக்குள் தாம் பார்த்ததில்லையெனவுங் கூறினார்கள். முடிவில் அக்கிராசனரவர்கள் சிவதொண்டுக்கும், சைவ வளர்ச்சிக்கும், தமிழக முன்னேற்றத்துக்குமாகத் தம்வாணாளைச் சமர்ப்பித்ததனில் புகழுக்குரியரெம் நாவலர்பெருமானுதலால் அவர்களுக்கன்புசெய்தல் சிவப்பிரீதியாகுமெனவும், அவர்கள் குருபூசையை வருஷந்தோறும் நடைபெறச் செய்தல் எங்கடனாகுமெனவும் கூறினர். இதன்பின் பூஜை நடந்தது. ஸ்ரீ க. சிவப்பிரகாசமவர்கள் தலைவருக்கு நன்றிமொழி கூறினர். 9 மணியளவில் கூட்டம் முடிந்தது. கார்த்திகை மாதம் 17-ந் திகதியாகிய ஞாயிற்றுக்கிழமையன்று நாவலர் பெருமான்பேரால் ஏழைகளுக்கு அன்னமளிக்கப்பட்டது. —கடித.

## கடிதம்.

### கோலக்கஞ்சார் கணேசராலயம்.

நிகழும் 1923-ம் ஆண்டு நவம்பர்மீ 18உ ஞாயிற்றுக்கிழமை பகல் 9 மணியளவில் மேற்படி ஆலய பகிரங்கக் கூட்டம் கோயில் சந்நிதானத்தில் பலசனசமூகத்தில் அவ்வூர்ச் சைவசமய அபிமானிகளது வேண்டுகோளின்படி கூட்டப்பெற்றது. அத்தருணத்தில் புகைரதப் பகுதி இஞ்சினீர் ஆபீசில் உத்தியோகமாயிருக்கும் ஸ்ரீ சி. கார்த்திகேயபிள்ளை அவர்களை அக்கிராசனம் வகிக்கும்படி சபையார் தெரிவு செய்தனர். கடந்த வருடங்களில் இவ்வாலயத்து வரவு செலவுக் கணக்குகளும், இன்னார் இன்னார் இன்னின்ன தருமகைங்கிரியங்கள் மேற்படி ஆலயத்துக்சாகச் செய்தார்களென்றும், இன்னும் அவ்வாலயத்துக்காக இருப்பாகஇருக்கும் நிதியைப்பற்றியும் காரியதரிசியாகவிருந்த ஸ்ரீ கு. ஆறுமுகம்அவர்கள் வாசித்தனர். சபையோர் கணக்குகளையும் மற்றைய சங்கதிகளையும் அங்கீகரித்தனர். இவ்வாலயத்துக்காக இனிமேல் கருமங்கள்பார்த்துவருவதற்கு டாக்டர் அ. சிவக்கொழுந்து அவர்களையும், சுகாதாரப் பகுதி மலேறியாப் பரிசோதகர் ஸ்ரீ வே. க. நாகரத்தினம்அவர்களையும், காட்டுக்கந்தோர் பிரதம லிகிதர் ஸ்ரீ ஆ. செல்லையா அவர்களையும், சுகாதாரப்பகுதி ஸ்ரீ க. இராமசாமித்தேவர் அவர்களையும், வர்த்தகர் ஸ்ரீ அ முத்துச்சாமி அவர்களையும் பஞ்சாயத்துமார்களாக ஏற்படுத்தினர்.

கடந்தவருஷங்களாக கௌரவ காரியதரிசியாகவிருந்து கடமைபார்த்துவந்தஸ்ரீ கு. ஆறுமுகம் அவர்கள் மேர்படி ஆலயத்துக்காகச் செய்த பெருமுயற்சியையிட்டும் அவரது தயாளகுணத்தையிட்டும்சபையோர்மெச்சி அவருக்கு துதிகூறினர்.

ஈற்றில் அக்கிராசனம் வகித்திருந்த ஸ்ரீ கார்த்திகேயபிள்ளை அவர்கள் ஒற்றுமையெனும் விஷயத்தைப் பொதுவாகச் சுருக்கிக் கூறி கூட்டத்தை முடித்தனர்.

அகண்ட பரிபூரணசச்சிதானந்த பரம்பொருளாகிய கணேசப்பெருமான் சகல விக்கினமும் வராதொழியச் செய்து சகலருக்கும் கிருபா கடாட்சஞ் செய்வாராக. சுபம்,

இங்ஙனம்,

தேவஸ்தான சபை அங்கத்தவன்.

கோலக்கஞ்சார்,
23—11—23.

### சுபோதத் துணுக்கைகள்.

தமிழ்க்கல்வியறிவற்ற மந்தமதியினர் குழுமிய சபையின்கண்ணே தமிழ்க் காவியங்களிற் பொதிந்துள்ள நவரசங்களையும், சொற்சுவை பொருட்சுவைகளின் சிறப்பையும் எடுத்து விளக்கற்க. "பிறவிக் குருடனுகிய ஒரு மணமகனின் பக்கத்திலே, முப்பத்திரண்டு லக்ஷணங்களும் அமைந்து, பாதாதிகேசம்வரை, ரத்தினுபரணங்களினுல் அலங்கரிக்கப்பெற்ற மணமகளைக் கொண்டுபோய் வைத்தால், அவ்வழகை யுணர்ந்து இன்புறுவானு? மைந்தரைப் பிரசவிக்குமருமை வந்தி அறிவாளா? ஆணிமுத்தி னருமை எனத்துக்குத் தெரியுமா? இதைக் குறித்து ஓர் சிறுச் சரிதை கூறுகின்றேன். அது வருமாறு:—

சுமார் நூறு வருடங்களின் முன்னரே ஓர் வித்துவான் 'இராம கிருஷ்ணர்' என்னும் நாமதேயத்தை யுடைய நிரட்சரகுட்சியாகிய ஒரு தனவந்தர்மீது, தன்னை வருத்தும் மிடியின் கொடுமையால் ஏதும் பெற விரும்பி, "தலைவி தன் காதலைத் தலைவற் குணர்த்தல்" என்னுந் துறையில் மகா விஷ்ணுமூர்த்தி ஸ்ரீ ராமனுக அவதாரஞ்செய்த காலத்தில் சூரிய புத்திரனுகிய சுக்கிரீபனுக்காக இந்திரன் மகனுகிய வாலியை வதைத்ததால், அவன் பிதாவான இந்திரன் தன்மீது குரோதங் கொள்ளாவண்ணம் பிந்திய ஸ்ரீ கிருஷ்ணவதாரத்தில், சூரிய புத்திரனுன கன்னனைக் கொன்று இந்திரன் மதலையாகிய அருச்சுனனை யிரட்சித்த இராம கிருஷ்ணர் என்னும் பிரபுவே! எனது காதலைக் கண்டு அடிக்கடி நிந்திக்கின்ற எனது தாயாருக்கும், அநுவந்திக் சனுக்கன்தோறும் முத்துக்கள் சொரியும் கரும்பை வில்லாக வளைக்கின்ற மன்மதனுக்கு மாதாவான இலக்குமியின் தாயாகிய சமுத்திரத்துக்கும், அநுவந்தித் தன்னைக காகத்தின் கூட்டுக்குள்ளே முட்டையிட்டுச்சென்ற தனது பெற்றதாய்க்கும், அம்முட்டையைத் தன்னுடைய முட்டையெனக் கருதி அடைகாத்துப் பெற்ற காகமாகிய செவிலித்தாய்க்கும் ஒருதவியுஞ் செய்யாத வன்கண்மைபொருந்திய குயிற்பட்சியினுலும் வருந்தி வாடுவேனே? என்னுங் கருத்தையமைத்து,

விருத்தம்.

"என்னனைக்கன்றி முத்தனைக்குளிக்கு மிறையனைய னைக்குமேயன்றி
மன்னனைக்கன்றிப் பின்னனைக் குதவா வன்புளால் வருந்தி வாடுவனே?
முன்னனைகொன்று பின்னனைப்புரந்து முதபகை யயன்பிதா வுறமல்
கன்னனைக்கொன்று விஜயனைப்புரந்தகௌஸ்வ ராமகிருஷ்ணையனே"

என்னுஞ் செய்யுளைப்பாடி அப்பிரபுவின் சமுகத்திலே கொண்டுபோய்ப் படித்தார். அதைக் கேட்டவுடனே பிரபு அடங்காத சீற்றமெய்தி, ஓய் புலவரே! நீர் இப்போது படித்தபாட்டுச் சிங்களமா? தமிழா? சிங்களப்பாட்டைத் தமிழிலெழுதி வாசித்தீர் போலும். நம்மையொத்த அறிவாளிகளது சமுகத்தில் இவ்விதமான பேய்ப்பாட்டைப் பாடிவந்து படிக்கலாமா? பைத்தியகாரா! கொல்லதெருவிலே ஊசி விலை போகுமா? இனிமேல் இப்படியான வீண்பாட்டுகளைப்பாடிக்கொண்டு என்னுடைய முன்னிலையிலே வரப்படாது; கற்றுக்குட்டியாகிய நீர் வித்துவானென்று பட்டங் கட்டிக்கொண்டு வெளியிலே புறப்பட வெட்கமில்லையா? நன்றாய் படித்துக்கொண்டு வாரும். ஒரு சல்லியுந் தரமாட்டேன் போய் வாருமென்று வெறுங்கையோடு அனுப்பிவிட்டார். இம்மாற்றத்தைச் செவியுற்றவித்துவான், அந்தோ! சிவ! சிவ! இவரிடத்திலேதாவது வாங்கிப் பிழைக்கலாமென்று நம்பி எவ்வளவோ சிரமப்பட்டுப் பாடி வந்தேனே! நான் பட்ட பிரயாசை அனைத்தும், ஆற்றிற் கரைத்த புளியாய்விட்டதே"! என்று நெட்டுயிர்ப்பெறிந்து சிந்தை யலமந்து வெறுங்கையோடு போனர். போகும்போது வழியிலே மாடுமேய்க்கும் பையன்கள் சந்தித்து, ஓய் புலவனுரே! அந்த இராம கிருஷ்ணர் என்னும் பிரபுவின்மீது கவி பாடிக்கொண்டு போனீர், அவரிடத்தில் ஒன்றும் பெறுது வாடியமுகத்தோடு வருவதற்கு நியாயம் என்னே? என்று கேட்டார்கள். உடனே அவர் நடந்த சம்பவத்தை மனவருத்தத்தோடு கூறினுர். அதைக்கேட்டு மாடு மேய்க்கும் பையன்கள் மந்தகாசஞ் செய்து, அப்பிரபுவுக்கு முன்செய்த நல்வினைப்பயனுல் ஏதோ கொஞ்சம் பொருள் கைகூடிவிட்டது. கல்வியறிவு கனவிலுந் தெரியாது. இலக்குமியிருக்குமிடத்தில் சரஸ்வதி யிருப்பாளா? மாமியும் மருமகளுங்கூடி ஒத்திருந்ததை எங்கேயாவது கண்டீரா? இதற்காக அவரையேன் குறை கூறுகின்றீர்? நாங்கள் ஒரு பாட்டுப்பாடித் தருகிறோம்: அதைக் கொண்டுபோய் அவருக்கு முன்னேபடித்தால் போதிய சன்மானஞ் செய்வாரென்று சொல்லி ஒரு பாட்டை எழுதிக் கொடுத்தார்கள்: வித்துவான் அதைப்பெற்றுக்கொண்டு தனவந்தருக்கு முன்னே போய் மகாப்பிரபு! முந்தின கவியைத் தள்ளிவிட்டுத் தங்கள் உத்தரவின்படி வேறொரு செய்யுள் பாடிக்கொண்டு வந்திருக்கின்றேன். அதைத் திருச்செவி சாத்தியருளுக என்று உபசாரங் கூறி, அப்பையன்கள் பாடிக்கொடுத்ததாகிய

"பாக்காவது கமுகின் கனி பருப்பாவது பயறு
தேக்காவது மலைச்சாரலில் நிற்குஞ் சில மரங்கள்
மேற்காவது கிழக்கேநின்று பார்த்தாலது தெரியும்
காக்கா வெனக்கத்துவது காகமதுவாகும்"

இப்பாட்டைப் படித்தார். அதைக்கேட்ட பிரபு அடங்கா மகிழ்ச்சி எய்தி நன்று! மிகநன்று! என்று வியந்து இதுவல்லவோ அருமையான பாட்டு; இதனுடைய சொல் விளக்கமென்ன! அலங்காரமென்ன! சுருங்கச் சொல்லல் விளங்க வைத்தல் என்பது முதலிய எல்லாலக்ஷணங்களும் அமைந்திருக்கின்றனவே யென்று மிக்க ஆனந்தமடைந்து, ஒரு தாம்பாளத்திலே ஐம்பது ரூபாய் வெற்றிலை பாக்கோடு வைத்துக் கொடுத்துப் பிரியாவிடைகூறி அனுப்பினுர். கலைவல்லீர்! தமிழருமைதெரியாத மூழுமக்களுடைய காதென்னும்பாம்புப்புற்றிலே, எலும்பைப்பெண்ணுக்கியதும், பெரியபாறைக் கல்லைத்தெப்பமாக்கியதும், செங்கற்களைப் பொன்னுக்கியதுமாகிய தமிழென்னுஞ் செந்தேன் குழம்பை ஒருபோதும் பெய்யாதீர்கள். (வரும்)

இங்ஙனம்,

க. வைத்தியலிங்கபிள்ளை,

வண்ணைநகர்,

## புங்குடுதீவு ஸ்ரீ கந்தசுவாமிகோவில் திருக்குளத் திருப்பணித் தருமம்.

புங்குடுதீவு மேற்கில் கிராஞ்சி ஸ்ரீ கந்தசுவாமிகோவில் திருக்குளத் திருப்பணிக்காகத் தருமம் கொடுத்த ஷை நகரவாசிகளும் மலாய் நாட்டிலிருப்பவர்களுமாகிய பிரபுக்களால் வரவும் செலவும்:—

| | | வெள்ளி சென்று. |
|---|---|---|
| ஸ்ரீ ச. மு. பொன்னையா அவர்கள் | | 40 |
| ,, மு. பசுபதிபிள்ளை | ,, | 30 |
| ,, சிக. மா.ஆ. ஆப | ,, | 15 |
| ,, வே. சின்னத்தம்பி | ,, | 10 |
| ,, கா. நாகலிங்கம் | ,, | 10 |
| ,, பொ. தம்பிப்பிள்ளை | ,, | 10 |
| ,, க. சிவகுரு | ,, | 10 |
| ,, மு. சின்னையா | ,, | 10 |
| ,, கா. தில்லையம்பலம் | ,, | 10 |
| ,, க. இராமலிங்கம் | ,, | 10 |
| ,, மு. முத்தையா | ,, | 8 |
| ,, இ. குழந்தைவேலு | ,, | 8 |
| ,, மு. சின்னத்தம்பி | ,, | 7 |
| ,, நா. கதிரவேலு | ,, | 6 |
| ,, கா. அம்பலவாணர் | ,, | 6 |
| ,, அ. கதிரவேலு | ,, | 5 |
| ,, நா. சபாபதி | ,, | 5 |
| ,, வே. கந்தையா | ,, | 5 |
| ,, மு. மருதப்பு | ,, | 5 |
| ,, க. நாகலிங்கம் | ,, | 5 |
| ,, இ. செல்லையா | ,, | 5 |
| ,, அ. கந்தையா | ,, | 5 |
| ,, மு. தருமலிங்கம் | ,, | 5 |
| ,, கு. கந்தையா | ,, | 5 |
| ,, நா. அம்பலவாணர் | ,, | 5 |
| ,, சு. முருகேசு | ,, | 5 |
| ,, அருளம்பலம் காரைநகர் | | 5 |
| ,, நா. குமாரவேலு | ,, | 5 |
| ,, நா. சு. கனகசபை | ,, | 5 |
| ,, ச. சுப்பிரமணியம் | ,, | 5 |
| ,, அ. சின்னையா | ,, | 5 |
| ,, க. வேலுப்பிள்ளை | ,, | 5 |
| ,, தி. செல்லையா | ,, | 5 |
| ,, ம. சின்னத்தம்பி | ,, | 5 |
| ,, நா. கந்தையா | ,, | 5 |
| ,, சி. வைத்திஸ்வரஐயர் | ,, | 5 |
| ,, கா. ஆறுமுகம் வட்டுக்கோட்டை | | 5 |
| ,, வி. காசிப்பிள்ளை | ,, | 5 |
| ,, வ. ஆறுமுகம் | ,, | 5 |
| ,, நா. வேலாயுதர் | ,, | 5 |
| ,, சோ. வேலாயுதர் | ,, | 5 |
| ,, ம. அம்பலவாணர் | ,, | 5 |
| ,, அ. நா. அ. க. | ,, | 5 |
| ,, மு. சின்னத்தம்பி | ,, | 4 |
| ,, க. இராமனாதர் | ,, | 3 |
| ,, க. அம்பலவாணர் காரைதீவு | | 3 |
| ,, மு. துரையப்பா | ,, | 3 |
| ,, க. சின்னத்தம்பி | ,, | 3 |
| ,, பொ. செல்லையா | ,, | 3 |
| ,, வ. நாகனாதி அளவெட்டி | | 2 |
| ,, நா. சின்னத்துரை | ,, | 2 |
| ,, தீ. ஆறுமுகம் | ,, | 2 |
| ,, ச. பொன்னம்பலம் | ,, | 2 |
| ,, இ. கந்தையா | ,, | 2 |
| ,, சிற்றம்பலம் | ,, | 2 |
| ,, முருகேசு | ,, | 2 |
| ,, செ. கணபதிப்பிள்ளை | ,, | 2 |
| ,, கந்தையா | ,, | 1 |
| ,, சி. நடராசா | ,, | 1 |

ஆக மொத்தம் வரவு வெள்ளி 367

மேற்படி வெள்ளி இலங்கை மாற்றிய விபரம்.

| | | ரூ. ச. |
|---|---|---|
| வெள்ளி 160-க்கு 174 வீதம் | | 278 40 |
| ,, 75-க்கு 173¾ ,, | | 130 31 |
| ,, 132-க்கு 172 ,, | | 227 04 |
| | ஆகவரவு | 635 75 |
| ,, க அம்பலவாணர் அவர்கள் வரவு | | 25 00 |
| இலங்கை டாக்குத்தர் நடராஜா ,, | | 1 00 |
| | ஆகமொத்தம் வரவு | 661 75 |

செலவு:—கொழும்பிலிருந்து சிங்கப்பூர் போய் இலங்கை வந்து சேரவும் மலாய்நாட்டில் உள்ளூர்களுக்கு போய் வந்த றெயில் கூலியும் இலங்கை வரும் பொழுது கொழும்பில் நாள் 14-க்கு சாப்பாட்டுச்செலவும் சில்லறையும் 187 16

187 16—661 75

நீக்கி இருப்பு 474 59

இத்திருப்பணி நிறைவேற தங்கள் உதவியால் சேர்ந்த பணம் போதாமல் இருக்கிறது இன்னும் கூடிய உதவியைச் செய்து முடித்துவைக்கும்படி யெம்பெருமான் திருவருள் புரியும்படி பிரார்த்தித்துக் கொண்டிருக்கிறேன். வேலை நடந்து வருகிறது.

சி. இராமலிங்கம்.

(Mis. 415)

## "நவ சக்தி"

### வார மும்முறைப் பதிப்பு.

சந்தா விபரம்.

| | | |
|---|---|---|
| வருட சந்தா ... | ரூபா 15 | 0 |
| ஆறுமாத சந்தா ... | ,, 7 | 8 |
| மூன்றுமாத சந்தா ... | ,, 4 | 0 |
| மாத சந்தா ... | ,, 1 | 8 |

சிங்கப்பூர் பினாங்முதலிய வெளிநாடுகளுக்கு வருட சந்தா ரூபா 20.

### விளம்பர விகிதம்.

மும்முறைப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு நாள் ஒன்றுக்கு | 8 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 10 |

வாரப் பதிப்பு.

| | | |
|---|---|---|
| கலம் 1-க்கு வாரம் 1-க்கு | 7 | 0 |
| சில்லறை விளம்பரம் அங்குலம் 1-க்கு | 0 | 8 |

நீண்டகாலம் விளம்பரஞ் செய்வோர் நேரே எங்கட்கு எழுதவும்.

மானேஜர் "நவசக்தி",
இராயப்பேட்டை, சென்னை.

## "லோகோபகாரி".

28-வருஷகாலமாக இது தமிழுலகமெங்கும் உலவி வருகிறது. இதில் வேதாந்த விஷயங்களும் எளிய தமிழில் எழுதப்படும் சமாசாரங்களும் இனிய பாடல்களும் சித்திரபடங்களும் வெளிவரும். உலகத்தில் நடக்கும் ஒவ்வொரு விஷயத்தையும் பற்றி இப்பத்திரிகை எவருக்கும் அச்சமின்றி, உண்மையைக் கடைப்பிடித்து நடுநிலையான அபிப்பிராயங்களை வெளியிட்டுவரும். நாட்டிலே புத்துயிர் ஏற்பட்டு இந்தியர் சுயராஜ்ய பதவி யடைந்து ஞாலமெல்லாம் இன்பம் அடைய வேண்டுமென்பதே "லோகோபகாரி" யின் முக்கிய நோக்கம் ஸ்ரீமான். பரலி. சு. நெல்லையப்பபிள்ளை அவர்கள் இதன் ஆசிரியராக இருக்கின்றார். தமிழறிந்த ஒவ்வொருவரும் இதனை ஆதரிக்கவேண்டும். வருஷ சந்தா ரூபா நான்கே. வெளிநாட்டிற்கு ரூபா ஆறு, மாதிரிப்பிரதி இனும்,

காரியஸ்தர், "லோகோபகாரி"
கோமளேஸ்வரன் பேட்டை, சென்னை.

## அடைவுநகை விற்பனவு விளம்பரம்.

1892-ம் ஆண்டின் 8-ம் இலக்கச் சட்டவிச்சட்டத்தின்படி லைசென்ஸ் பெற்று வண்-கிழக்கில் அடைவுபிடிக்கும் நா. ப. தியாகராஜக்குருக்களிடம் அடைவு வைக்கப்பட்டு இப்போது தவணை தப்பி ஷை சட்டத்தின் 12 ம் பிரிவின்படி பிரசித்த ஏலத்தில் விற்கப்படவேண்டிய நகைகளின் விபரம்:—

| இல. | திக. | ரூ. | ச. | ஊரும், பெயரும். | நகைவிபரம். |
|---|---|---|---|---|---|
| 1922ஞு ஆனிமீ | | | | | |
| 1094 | 30 | 20 | 20 | மா. மாரிமுத்து கொக்குவில் | பூ 2 |
| ஆடி | | | | | |
| 1138 | 11 | 13 | | அ. முத்துத்தம்பி கொக்குவில் | மூன்றுகல்லுவைத்த மோதிரம் 1 |
| 1227 | 31 | 10 | | இ. கந்தையா திருநெல்வேலி | சிவப்புக் காதோலை சோடி 1 |
| ஆவணி | | | | | |
| 31 | 12 | 42 | 60 | க. அப்பாக்குட்டி வண்கிழக்கு | சுரைக்காப்பு சோடி 1 |
| 32 | 12 | 11 | | ச. செல்லையா கொக்குவில் | கல்லுமோதிரம் 1 |
| 64 | 19 | 15 | | த. சங்கரப்பிள்ளை கொக்குவில் | கல்லுமோதிரம் 2 |
| 65 | 19 | 25 | | ,, | தாலி 1 பூ 1 |
| 71 | 22 | 10 | | தி. முருகேசு சுதுமலை | மோதிரம் 1 |
| 81 | 25 | 10 | | ஆ விசுவலிங்கம் வண்மேற்கு | கொலிசு ஒற்றை 1 |
| 85 | 26 | 10 | 73 | த. சங்கரப்பிள்ளை கொக்குவில் | வெள்ளிச் சங்கிலி சோடி 1 |
| 114 | 29 | 13 | | க. நாகனாதர் கொக்குவில் | மோதிரம் 4; சிமிக்கிவாளி சோடி 1 |
| புரட்டாதி | | | | | |
| 187 | 16 | 50 | | சி. தம்பாபிள்ளை தாவடி | ஒப்பின் காதோலை சோடி 1 |
| ஐப்பசி | | | | | |
| 219 | 4 | 20 | | வே சின்னப்பா கொக்குவில் | கர்ப்பூராண் சறடு 1 |
| 297 | 22 | 25 | | வ. தம்பையா சங்குவேலி | ஒப்பின் காதோலை சோடி 1 |
| 326 | 29 | 42 | 50 | த. கந்தையா வண்மேற்கு | ஒப்பின் காதோலை சோடி 1 |
| கார்த்திகை | | | | | |
| 339 | 1 | 8 | | அ. செல்லத்துரை கோண்டாவில் | வெள்ளிச்சங்கிலி சோடி 1 |
| 352 | 3 | 15 | | வ சிதம்பரனாதர் வண்கிழக்கு | பச்சைவைத்த மோதிரம் 1 |
| 370 | 7 | 9 | 04 | ஆ. சுப்பையா கலட்டி | கூடு 1 |
| 372 | 8 | 7 | 04 | ச. சுப்பிரமணியம் வண்மேற்கு | வெள்ளிச் சங்கிலிக் கொடி 1 |
| 415 | 14 | 60 | | கா. தம்பு வண் கிழக்கு | பட்டணக்காப்பு சோடி 1 |
| 453 | 20 | 50 | | நா. விசுவலிங்கம் வண் கிழக்கு | ஆணிபோட்ட பட்டணக்காப்பு சோ. 1 |

விற்பனவு:—ருதிரோற்காரி வருடம் கார்த்திகை மீ 30௳ (15-12-23) சனிக்கிழமை முற்பகல் பத்துமணி தொடக்கம் எடுபட்ட நகை பிறகீங்கலாக மிகுதி ஷையாருடைய வீட்டில் பிரசித்த ஏலத்தில் விற்கப்படும்.

அரு. செல்லையா உடையார்,
வெந்திஸ்மேஸ்தர்.

(Mis 414).

[ESTABLISHED 1909].

## MESSRS. A. S. M. A. KHADER BROTHERS
### Kairul Muslimeen Medical Hall
### PORTONOVO (*SouthArcotDistrict*).

வீண் ஆரவாரமான விளம்பரங்களைக் கண்டு மிரண்டுவிடாதீர்கள்.

அடியிற் கண்ட லேகியத்திற்காக ரூபா 1000 இனுமளிக்கப்படும்.

இந்த லேகியம் சாப்பிட்ட 3மணி நேரத்திற்கெல்லாம் சப்த தாதுக்களின் பலத்தையும் வீரிய உற்சாக தத்துவத்தையு மடைவிக்கச் செய்யவில்லையென்றுவது பரீட்சைசெய்யும் அன்பர்களுக்கு பலனைக் கொடுக்கவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் சொல்லுகிறவர்களின் பணத்தை உடனே வாப்ஸ் கொடுத்துவிடப்படும்.

அசல் பாகம் — சந்தோஷிக்கச் செய்வது

உத்திரவாதமுள்ளது.

## சித்தஜானந்த சிட்டுக்குருவி லேகியம்.

இந்த லேகியம் முற்காலத்து மன்னர்களால் உபயோகித்து வீரியசக்தி குறையாது இல்லாஇன்பவாழ்க்கையை யடைந்து புத்திர பவுத்திர சம்பன்னராய் நீடூழி வாழும்பொருட்டே நமது முன்னோர்களால் கூறப்பட்ட பழைய ஏட்டுப்பிரதிகளிலுள்ள ஔஷத பாகங்களிற் சிறந்ததும், இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, அறிவுவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களை அடையக்கூடியதுமான ஓர் புருஷசஞ்சீவியாகின்றது. மற்ற விபரங்களை நமது கேட்லாக்கில் காணலாம்.

லேகியத்தின் முக்கிய குணமாவது.

வாத பித்த சிலேத்ம மிகுதி குறைவால் ஏற்படும் இரத்தக்குறைவு, எழுவகை தாதுக்களின் பலஹீனம், அஸ்தி வெட்டைச்சூடு, பிரமேகவெட்டை, நீர்க்கடுப்பு, நீரடைப்பு, நீர்சுருக்கு, நீர்எரிச்சல், நீர்தாரை பெருத்தல் ஆகிய நோய்களையும், நித்திரையில் அடிக்கடி உண்டாகும் தாதுநஷ்டம், நித்திரைப்பங்கம், Spermatorrhea, தேகமெலிவு, சதாஇடுப்புவலி, கைகாலசதி, மலச்சிக்கல், பசிமந்தம், தேகத்தில் பலவிடங்களிலும் ஒடித்திரியும் பலவித வாய்வுகள், நெஞ்சுவலி, Nervousdiseases, ஆகிய நோய்களை சுசப்படுத்தி, புதியமேனியுடன் இரத்தவிர்த்தி, வீரியவிர்த்தி, சந்தானவிர்த்தி முதலிய நலன்களைப் பெறுவதில் இதைவிடச் சிறந்த மருந்து கிடைப்பது அரிதினுமரிது. இச்சிறந்த அபூர்வலேகியத்தின் ஆச்சரிய குணத்தை உடனேக்குடன் அறியவேண்டியதென்றே ஜனானுகூல நன்மைக்காகவே இதனை மிகவுங் குறைந்த விலைக்கு வெளியிட்டிருக்கின்றேம்.

40 நாள் சாப்பிடும் பெரியடப்பி 1-க்கு விலை ரூபா 8—0—0.
20 நாள் சாப்பிடும் சிறியடப்பி 1-க்கு விலை ரூபா 4—0—0.

வி. பி. தபால் செலவு பிரத்தியேகம்

முற்பணமனுப்பினால் V. P. தபால்செலவு இனும். பினாங்கு, சிங்கப்பூர், கிள்ளான், கோலாலம்பூர், பேரா முதலிய பிறதேசவாசகர்கள் மருந்தின் கிரயமும், தபால்சார்ஜு ரூபா 2ம் சேர்த்து முற்பணமனுப்பி மருந்து பெறவேண்டும். ஷை யூர்களுக்கு வி. பி. யில் அனுப்பப்படமாட்டாது.

இச்சிறந்த லேகியமானது சிட்டுக்குருவியின் கிருதம் அதாவது ஷைகுருவியின் சத்தால் செய்யப்படவில்லையென்றுவது, அல்லது இந்த லேகியத்தைச் சாப்பிட்டதால் குணமொன்றுஞ் செய்யவில்லையென்றுவது கடவுளுக்குப் பொதுவாய் ரூபிப்பவர்களுக்கு அவர்கள் கொடுத்த மருந்தின் கிரயத்தையும் ரூபா 1000 இனுமாயும் கொடுக்கப்படும். அப்படி ரூபித்தும் இனுமுடையப்பணத்தை கொடுபடாவிட்டால் கோட்டுமூலமாக வசூல்செய்துகொள்ளலாம். அதன்றியும் மற்றக் கம்பெனியாரின் இத்தகையான குருவிலேகியங்களுக்கு இப்படிப்பட்ட ஆச்சரிய குணமுண்டென்றுவது, அல்லது இச்சிறந்த குண பாக லேகியத்தை செய்து காட்டினாலாவது முன் கண்ட இனும் கொடுக்கப்படுமென்பதற்கு உத்திரவாதமளிக்கப்படும்.

Telegraphic Address
Khader Brothers
Porto-Novo.

என் மேல்விலாசம்:—
மெஸ்ஸர்ஸ் ஏ. எஸ். எம். ஏ. காதர் பிரதர்ஸ்,
கைறுல் முஸ்லிமீன் வைத்தியசாலை,
பறங்கிப்பேட்டை, தென்னாற்காடு ஜில்லா.

Y. 19).

## "பணம்" "பணம்"

"பணம்" இதென்ன விளம்பரம்? "பணம்" என்னும் பத்திரிகையைப் பற்றியதோ? ஆம். "பணம்" என்னும்பெயரைக் கேட்டளவிலேயே உள்ளம் இன்பக்கடலாடுகின்றது. இது ஒரு தமிழ் வாரப்பத்திரிகை. இதன் ஆசிரியரை நாம் நெடுங்காலமாக அறிவோம். செந்தமிழ்நாட்டில் சிறுவர் சிறுமியர் மூதல் விருத்தர் ஈறாக யாவரும் மனமுவந்து வாசிக்கக்கூடிய பத்திரிகை "பணம்" பத்திரிகையேயாகும். ஒருவாரத்தின் செய்திகள் அத்தனையும் ஒன்று கூட விடாமல் தன்னகத்தே தாங்கி நிற்கும் திறன் "பணம்" பத்திரிகைக்கு உண்டு. இவ்வொரு பத்திரிகையைமட்டும் வாசித்தால் ஒரு தினசரிப்பத்திரிகையைத் தொடர்ந்து வாசிப்பதிலும் அதிகமான சங்கதிகளை அறியலாம். உடனே "பணம்" பத்திரிகையைப் பெறுங்கள். சந்தாதாரராகுங்கள். வருடமுடிவில் ஒருபுஸ்தக உருவமாகக்கூடிய சிறப்புடையது. உடனே எழுதுங்கள். உங்களுக்கு இது அவசியமான பத்திரிகை. வருடச்சந்தா ரூபாய் ஐந்து.

விலாசம்:—மானேஜர் "பணம்"
ஆபீஸ், திருச்சி.

யாழ்ப்பாணம்
சைவபரிபாலனசபையாராற்
பிரசுரஞ் செய்யப்பெற்ற

## புத்தக விளம்பரம்.

| | ரூ. ச. |
|---|---|
| முதற்பாலபாடம்(சித்திரசகிதமானது) | க0 |
| இரண்டாம் பாலபாடம் ,, | கரு |
| மூன்றும் பாலபாடம் ,, | உ0 |
| நான்காம் பாலபாடம் ... ... | ௩0 |
| ஐந்தாம் பாலபாடம் ... .... .... | ௪0 |
| ஆறும் பாலபாடம் .... ... ... | ௬0 |
| கலாமஞ்சரி எட்டாம் வகுப்பிலும், "ஆங்கில ஸ்கூல் லீவிங் சேர்ட்டிவிற்கற்"வகுப்பிலும் பயிலும்பாணவர்கட்குத் தமிழ்ப்பாடமாக உபயோகமாகும்வண்ணம் இயற்றப்பெற்றுள்ளது. விளக்கத்துடன் | எரு |
| கலாமஞ்சரிவிளக்கம்(மாத்திரம்) | ௩0 |
| கிருட்டிணன்றூது, உரையுடன் | அரு |
| நமச்சிவாயமாலை, உரையுடன்... | ௩ |
| ஆத்திசூடி ... ... ... | ௩ |
| வெற்றிவேற்கையுரை ... ... | ௩ |
| வாக்குண்டாமுரை ... ... ... | ௩ |
| நல்வழியுரை .... ... ... ... | ௩ |
| நன்னெறியுரை ... .... ... ... | ௩ |
| இனியவை நாற்பதுரை (ஆங்கிலமொழிபெயர்ப்புடன்)... ... ... | கஉ |
| இலக்கண வினாவிடை... ... ... | க0 |
| நிகண்டு கக-வதும் கஉ-வதும் ... | உரு |
| திருவாதவூரடிகள்புராண மூலம் ... | உரு |
| திருச்செந்தூர்ப்புராணவுரை | |
| கிளேஸ்காகிதம் ... ... ... | க-உரு |
| றவ்காகிதம்... ... ... ... | க-00 |
| கந்தரலங்காரம் கந்தரநுபூதியுடன் | க0 |
| கந்தசஷ்டி கவசம் ... ... ... | ௩ |
| சுப்பிரமணியசுவாமி விருத்தம் ... | ௩ |
| ஆறுமுகசுவாமி விருத்தம்... ... | ௩ |
| பிள்ளையார்கதை ... ... ... ... | கஉ |
| கதிரைமலைப் பேரின்பக்காதல் ... | கஉ |
| பிரபஞ்சப் பெருவழக்கு ... ... | க0 |
| இந்துசமயி தாவரஜீவியாயிருத்தலேன்? ... ... ... ... ... | க0 |
| சாவித்திரி சரித்திரம்(புதியபதிப்பு) | ௬ |
| குமணசரித்திரம் ,, | ௬ |
| பஞ்சாத்தினத் திருப்புகழ் ... .... | ௩ |
| சோமவாரவிரதமான்மியம்... .... | க0 |
| கந்தவிரதமான்மியம் .... .... .... | க0 |
| சிவபூசைத்திரட்டு ... (புதியபதிப்பு) ஸ்ரீலஸ்ரீ. ஆறுமுகநாவலரவர்களது ஏட்டுப்பிரதியின்படி அச்சிடப்பெற்றது... ... ... ... ... | கரு |
| மறைசையந்தாதி ... ... ... | உ0 |

ஒரேமுறையில் 25/ ரூபாவுக்குப் புத்தகம் எடுப்பவர்களுக்குப் 10 புத்தகத்துக்கு 2 புத்தகம் கழிவுகொடுக்கப்படும்

சபையாராலச்சிட்ட புஸ்தகங்கள் வண்ணார்பண்ணை, S. S. சண்முகம், M. S. துரை, பிறிற்ருனியா ஸ்ரோர், சரஸ்வதி புத்தகசாலை முதலிய இடங்களிலும், வல்லுவெட்டித்துறை ந. வ. அரியகுட்டிப்பிள்ளையுடைய கடையிலும் தக்க கழிவுடன் பெற்றுக்கொள்ளலாம்.

மானேசர்,
"இந்துசாதன" ஆபீஸ்,
வண்ணார்பண்ணை,

வான்முகில் வழாது பெய்கமலிவளஞ் சுரக்க மன்னன், கோன்முறை யரசுசெய்க குறைவிலாதுயிர்கள் வாழ்க, நான்மறை யறங்க ளோங்க நற்றவம் வேள்விமல்க, மேன்மைகொள் சைவநீதி விளங்குக வுலக மெல்லாம்.

Printed and Published by S. Ampikaipagan, for the Proprietors at the Saiva Prakasa Press, Jaffna.